# NSW HEALTH

## COVID-19 Key Points – Friday 1 October 2021

- தடுப்பூசியின் விகிதத்தைப் பொறுத்தவரை, ஒரு மருந்தளவைப் பெறுவதில் 87.2%-ஐயும், இரண்டு மருந்தளவுகளையும் பெற்றுக்கொள்வதில் 64%-ஐயும், நியூ சவுத் வேல்ஸ் தற்போது எட்டியுள்ளது. அத்துடன், 12-15 வயதுடையோரில் 50%-க்கும் அதிகமானோர் தடுப்பூசியின் முதலாவது மருந்தளவைப் பெற்றுள்ளனர்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன் வந்த உங்கள் அனைவருக்கும் நன்றி. நாங்கள் இப்போது நியூ சவுத் வேல்ஸ்-இல் 10.1 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசி மருந்தளவுகளை செலுத்தியுள்ளோம்!
- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணி நேரத்தில், 864 பேர் உள்ளூர் கோவிட்-19 நோய்த்தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். பரிதாபகரமாக, 15 பேர் உயிரிழந்துள்ளனர்.
- உங்கள் பகுதியில் உள்ள கட்டுப்பாடுகளை அறிந்துவைத்திருப்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: https://www.nsw.gov.au/covid-19/rules
- நீங்கள் இந்த மாநிலத்தில் எங்கு வசித்துவருகிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல, ஆனால் தொடர்ந்தும் நோயறிகுறிகளை மக்கள் கண்காணிப்பதும், பரிசோதனையைச் செய்துகொள்ள வருவதும் இன்றியமையாதவை ஆகும். எவ்வளவு விரைவாக நோய்த்தொற்றுக்களை நாம் அடையாளம் காண்கிறோமோ, அவ்வளவு விரைவாக நோய்த்தொற்றுப் பரவல்களை எம்மால் கட்டுப்படுத்த இயலும். நியூ சவுத் வேல்ஸ் முழுவதும், 500-க்கும் மேற்பட்ட கோவிட்-19 பரிசோதனை இடங்கள் உள்ளன.
- கில்ட்ஃபோர்ட் (Guildford), வெலிங்டன் (Wellington), ஓபர்ன் (Auburn), மெரிலாண்ட்ஸ் (Merrylands), வொலொங்கொங் (Wollongong), பிளாக்டவுன் (Blacktown), லிவர்பூல் (Liverpool), கிரீனேக்கர் (Greenacre), பாங்க்ஸ்டவுன் (Bankstown) மற்றும் நரோமைன் (Narromine) ஆகியவையே அதிகூடிய நோய்த்தொற்றாளர்களைக்கொண்ட பகுதிகளாக உள்ளன.
- கழிவுநீரில் நேர்மறையாக நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ள பகுதிகள் குறித்து நாங்கள் தொடர்ந்தும் கவலைகொண்டுள்ளோம். ஹாஸ்டிங்ஸ் பாயிண்ட் (Hastings Point), பல்லினா (Ballina), குய்ரிண்டி (Quirindi), ஆர்மிடேல் (Armidale) மற்றும் டாம்வோர்த் (Tamworth) ஆகிய இடங்களில் உள்ளவர்களை, நோயறிகுறிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறும், பரிசோதனையைச் செய்துகொள்ள முன் வருமாறும் நாங்கள் ஊக்குவிக்கிறோம்.
- தடுப்பூசியைப் போட்டுக்கொள்வதுதான், நாம் இதிலிருந்து வெளியேறுவதற்கான வழி என்பதையும், நம்மையும், எங்கள் குடும்பங்களையும், அத்துடன் எமது நண்பர்களையும் பாதுகாப்பதற்கான சிறந்த வழி என்பதையும் தயவுசெய்து நினைவில் கொள்ளுங்கள்.